DECEMBER 2024 **P/ID 35313/PTL1C**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. அன்பின் ஐந்திணை என்றால் என்ன?

2. மருதத் திணைக்குரிய முதற்பொருளைக் கூறுக.

3. 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' - விளக்கம் தருக.

4. வஞ்சித் திணைக்குரிய இலக்கணம் யாது?

5. 'உழிஞை தானே மருதத்துப் புறனே'-பொருள் கூறுக.

6. பாடாண்திணை குறிப்பு வரைக.

7. களவியல் என்றால் என்ன?

8. பெண்டிரின் இயல்பினைச் சுட்டுக.

9. கரணம் தோன்றக் காரணம் என்ன?

10. கல்விப் பிரிவிற்கு உரிய கால எல்லையைக் குறிப்பிடுக.

11. இறைச்சி எவ்வாறு தோன்றும்?

12. 'அசை திரிந்து இயலா என்மனார்' - ஏன்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. அகத்திணையியலில் இடம்பெற்றுள்ள உவமையின் வகைகளை எழுதுக.

14. கைக்கிளைக்குரிய இலக்கணத்தை எடுத்தியம்புக.

15. வெட்சித் திணையின் துறைகளை எடுத்துரைக்க.

16. தலைவனின் ஐயத்தைப் போக்கும் கருவிகள் யாவை? விளக்குக.

17. களவியலில் தோழி பெறுமிடத்தை மதிப்பிடுக.

18. கற்பியலில் இடம்பெற்றுள்ள காமக்கிழத்தியர் கூற்றினை எடுத்துரைக்க.

19. தலைமக்கட்கு உரிய ஒருபால் கூற்று குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. குறிஞ்சித் திணைக்குரிய முதல், உரி, கருப்பொருட்களைப் பட்டியலிடுக.

21. "வஞ்சித் திணையும் துறையும்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

22. களவியலில் தலைவனின் கூற்றுகளை விளக்குக.

23. கற்பியலில் இடம்பெற்றுள்ள தலைமகள் கூற்றினை விவரிக்க.

24. உள்ளுறை உவமம் குறித்து விவரி.

———————